செய்தி வெளியீடு எண் : 708 நாள் : 15.04.2023

**இந்தி பேசாத மாநில இளைஞர்களும் மத்திய ஆயுதக் காவல் படையில் பணியாற்ற சமவாய்ப்பு பெறும் வகையில் தமிழ் உள்ளிட்ட பிற மாநில மொழிகளில் CAPF தேர்வை நடத்திட வலியுறுத்தி மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9.4.2023 அன்று எழுதிய கடிதத்திற்கிணங்க, அனைத்து மாநில மொழிகளிலும் தேர்வு நடத்தப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்ததையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு.**

கடந்த வாரம், மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்களுக்கு நான் எழுதியிருந்த கடிதத்தின் விளைவாக, மத்திய ஆயுதக் காவல் படை (CAPF) காவலர் தேர்வுகள் அனைத்து மாநில மொழிகளிலும் நடத்தப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்திருக்கிறது.

ஒன்றிய அரசின் இந்த முடிவை மனதார வரவேற்கும் அதேவேளையில், ஒன்றிய அரசால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளிலும் தமிழ் உள்ளிட்ட அனைத்து மாநில மொழிகளிலும் வினாத்தாள்கள் வழங்கப்பட வேண்டும் என்கிற நமது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

As a result of my letter to Hon’ble Union Minister of Home Affairs Thiru. Amit Shah, the Union Govt. has announced that it would conduct the CAPF exams in all state languages.

I wholeheartedly welcome this decision & reiterate our demand to provide Question Papers in Tamil & other state languages in all Union Govt. exams.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in